**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.28
https://ngmtamil.in/

# வேதாரணிய புராணம் காட்டும் வழிபாட்டு நெறிகள்

**வே. பூரணி[1],**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை-18.

**9994591320 / poornimavelusamy09@gmail.com.**

**முனைவர் ஆ. விண்ணரசி[2],**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை-18.

**ஆய்வுச் சுருக்கம்**

வேதாரணிய புராணம் சைவ சமய மரபில் முக்கிய இடம் பெறும் தலபுராணங்களுள் ஒன்றாகும். இப்புராணம், வேதாரணியத் திருத்தலத்தின் சிறப்புகளையும், தீர்த்த மேன்மைகளையும், அங்கு மேற்கொள்ளப்படும் வழிபாட்டு முறைகளையும், அவற்றின் ஆன்மீகப் பயன்களையும் விரிவாக எடுத்துரைக்கிறது. இவ்வாய்வின் நோக்கம், வேதாரணிய புராணம் சுட்டிக்காட்டும் வழிபாட்டு நெறிகளை ஆராய்ந்து விளக்குவதாகும். வேதாரணிய புராணத்தில் இடம்பெறும் தீர்த்தமாடல், விரதம், தானதர்மம், திருக்கோயில் வழிபாடு, ஆன்மார்த்த மற்றும் பரார்த்த வழிபாடு, சரியை–கிரியை–யோகம்–ஞானம் ஆகிய சைவ சமய நெறிகளின் வெளிப்பாடுகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்**

வழிபாட்டு நெறிகள், சைவம், சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆன்மார்த்த வழிபாடு, பரார்த்த வழிபாடு.

**முன்னுரை**

தமிழ்ச் சமய இலக்கியங்களில் தலபுராணங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. ஒரு தலத்தின் வரலாறு, இறைமகிமை, பக்தர்களின் வாழ்வியல் நெறிகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதில் தலபுராணங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அவ்வகையில், வேதாரணிய புராணம், சமய மரபுகளையும், வழிபாட்டு நெறிகளையும் விரிவாக எடுத்துரைக்கும் சிறப்புமிக்க நூலாகும். இப்புராணம், வேதாரணியம் என்னும் புனிதத் திருத்தலத்தின் பெருமைகளை மட்டுமல்லாது, மனிதன் இறையருளைப் பெறுவதற்காகச் செய்யக்கூடிய பல்வேறு வழிபாட்டு முறைகளையும் விளக்குகிறது. இறைவனை அடையும் பாதையாகவும், பிறவித் துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் கருவியாகவும் வழிபாடு அமைகிறது என்பதையும் இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

எனவே, **'வேதாரணிய புராணம் காட்டும் வழிபாட்டு நெறிகள்'** என்ற தலைப்பின் கீழ், இப்புராணத்தில் இடம்பெறும் பல்வேறு வழிபாட்டு முறைகளை ஆராய்ந்து எடுத்துரைப்பதாக இவ்வாய்வானது அமைகின்றது.

**வழிபாடு - விளக்கம்**

வழிபாடு என்பது இறைவனது திருவுருவங்களை ஆன்மாக்கள் தம் மனத்திலே நிறுத்தி அவரின் அருளைப் பெறுவதற்காக முயற்சி செய்தலாகும். ஆன்மாக்களுக்கு இடர் களைந்து இம்மை மறுமைப் பயன்களைத் தருவது வழிபாடாகும். வழிபாடு என்பது ஞானத்தை உண்டாக்கக் கூடிய சாதனம் எனப்பொருள்படும்.

உண்மை விளக்கம் என்னும் சாத்திர நூல் வழிபாட்டினை குரு, லிங்கம், சங்கமம் என்ற மூன்று நிலைகளில் வகுத்துக்காட்டுவதை

**"குருலிங்கவேடம் எனக் கூறில் இவை**
**கருவொன்றி நில்லார்கள் காண்."**

**(உண்மை விளக்கம், பாடல் எண் - 51)**

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. குருலிங்க சங்கம வழிபாடே, முக்திக்குரிய வழியாகும் என்பதைச் சிவஞான சித்தியாரும்,

**"தாபர சங்கம மங்கள்**
**எனும் இரண்டு உருவில் நின்று**
**மாபரன் பூசை கொண்டு**
**மன்னுயிர்க்கு அருளை வைப்பன்"**

**(சிவஞானசித்தியார் பாடல் எண் - 28)**

என்ற பாடலின் வழி உணர்த்துகிறது. குருவை இறைவனாகக் கொண்டு வழிபடும் முறை குருவழிபாடு ஆகும். ஏனெனில் இறைவனே ஞானகுருவாக வருவான் என்பது சைவசாத்திர முடிபாகும். இறைவனது லிங்கம் திருவுருவங்களை வழிபடுவது சகுண(உருவம்) வழிபாடாகும். இறைவனது மெய்யடியார்களை வழிபடுவது சங்கம வழிபாடாகும். இம்மூன்று வழிபாட்டு முறைகளிலும் பெருவலக்காயிருப்பது இலிங்க வழிபாடேயாகும். வேதாரணிய புராணமும் இலிங்க வழிபாட்டையே விளக்கிக் கூறுகின்றது.

**வழிபாட்டின் வகைகள்**

வழிபாடானது இரண்டு வகைப்படும். அவை

- ஆன்மார்த்த வழிபாடு
- பரார்த்த வழிபாடு

என்பன.

தனியொருவன் தம்நலன் கருதிச் செய்வது ஆன்மார்த்த வழிபாடு. பொதுமக்களின் நன்மையைக் கருதிச் செய்வது பரார்த்த வழிபாடு.

**"எடுக்கும் விழாவும் நன்னாள் விழாவும்"**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**(திருஞானசம்பந்தர் தேவாரம்,**

**திருநள்ளாறும் திரு ஆலவாயும், பாடல் எண் -10)**

எனும் தேவாரப் பாடலில் எடுக்கும் விழா (ஆன்மார்த்த வழிபாடு), நன்னாள் விழா(பரார்த்த வழிபாடு) பற்றிக் குறிப்பிடுவதை அறியமுடிகிறது. இவ்விருவகை வழிபாடுகளும் வேதாரணிய புராணத்தில் இடம்பெறுகின்றன.

**இராமபிரானின் ஆன்மார்த்த வழிபாட்டு நெறி**

இராமன், இராவணனைக் கொன்றதால் பிரம்மகத்தி பாவம் உண்டானது. அப்பாவத்தினைப் போக்குவதற்காகத் திருமறைக்காடு என்று போற்றப்படும் வேதாரணியத் திருத்தலத்தில் உள்ள வேத நதியில் புனித நீராடி, உயர்ந்த தவம் செய்தார். அத்தவத்தின் பயனால் மணிக்கர்ணிகைத் தீர்த்தம் விளங்க, சிவலிங்க உருவாய் அவ்விடத்தில் இறைவன் வெளிப்பட்டுத் தமது திருவுருவினைக் காட்டி பாவத்தினைப் போக்கினார். இதனை,

**"அத்தத் துறுதி கண்டக் கிரியில்வா ழண்ண றன்பால்**
**வைத்திடு சுத்த நீர்தோய் மணிகன்னி யுடனே கூட**
**வுத்திரஞ் செறிபங் கூனி யுவாவினி லுச்சி நேரஞ்**
**சித்தியை நல்க வாங்கே சிவலிங்க வுருவாய்த் தோன்றி"**

**(வேதாரணிய புராணம்,**

**இலிங்கோற்பத்திச் சருக்கம், பாடல் எண் - 197)**

என்ற பாடல்வழி பரஞ்சோதி முனிவர் கூறுவதை அறிய முடிகிறது. இன்றளவும் பக்தியோடு வணங்கி, தீர்த்தங்களில் முறைப்படி நீராடுவோர்தம் பாவங்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்று நம்பப்படுகிறது.

**அகத்திய முனிவரின் பரார்த்த வழிபாட்டு நெறி**

விந்திய மலைக்கும், மகாமேரு மலைக்கும் 'யார் பெரியவர்' என்ற வாக்குவாதம் ஏற்பட்டது. அப்பொழுது, விந்திய மலையின் தீயசெயலால் தென்பகுதி உயர்ந்து, வடபகுதி தாழ்ந்தது. இதனால் உலக உயிர்களுக்கு தீங்குநேரும் என்பதை உணர்ந்த இறைவன், அகத்திய முனிவரை அழைத்து வேதாரணியம் சென்று தவம் புரியச் சொன்னார். அகத்திய முனிவரும் இறைவன் வாக்கிற்கிணங்க, வேதாரணியத்தில் உள்ள கோடித் தீர்த்தத்திற்கு வட திசையில் தங்கி, ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி, அரிய தவம் செய்து உலகினை சமநிலை அடையச் செய்து, உலக உயிர்களைக் காத்திட்டார். இறைவன் அகத்திய முனிவரின் செயலைக் கண்டு, மனமகிழ்ந்து தனது திருமணக் கோலத்தினை அகத்தியருக்கு அத்திருத்தலத்தில் காட்டி அருளினார். இச்செய்தியை

**"எய்தியங் கரிகள் சூழ விலங்குபத் திராச னத்திற்**
**செய்தழற் றாமத் தன்று சிவந்திடு கடைக்கண் மாதுங்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**கைதரக் கலந்தி ருந்த காட்சியுங் காப்பு மாகப்**

**பெய்தவ குறுமு னிக்குப் பெருந்தகை கோலங் காட்ட”**

**(வேதாரணிய புராணம்,**

**மணவாளச் சருக்கம், பாடல் எண் - 506)**

என்ற பாடல் வழி புராணம் கூறுவதை அறியமுடிகிறது. இவ்வேதாரணியத் திருப்பதியில் வாழும் அனைவரும் காணுமாறு என்றும் நீங்காது எழுந்தருளியிருக்க வேண்டும் என அகத்திய முனிவரின் வேண்டுதலுக்கு இணங்க திருமறைக் காட்டில், திருமணக் கோலத்தில் இன்றளவும் காட்சி தருகிறார் திருமறைக்காடர். மேலும், பரார்த்த வழிபாடாக திருமறைக்காட்டிலுள்ள மரகதலிங்கத்திற்கு காலை, மாலை என இருவேளைகளிலும் வழிபாடு நடைபெறுவது இத்தலத்திற்குரிய தனிச்சிறப்பு. பிரதோஷம், பௌர்ணமி, அம்மாவாசை போன்ற நாட்களில் மாத வழிபாடுகள் நடைபெறும். சிறப்பு வழிபாடுகளாக மாசி மக நன்னாளில் இறவனின் திருமணமும், பதிகம்பாடிக் கதவு திறக்கும் பெருவிழாவும் நடைபெறுகின்றன.

**வேதாரணிய புராணத்தில் நால்வகை நெறிகள்**

**சரியை நெறி**

சரியையானது சிவாலயங்களில் பக்தியுடன் திருவிளக்கேற்றல், நந்தவனம் அமைத்தல், பூக்கொய்தல், பூமாலை முதலியன கட்டிச்சேர்த்தல், பூசனைபுரிதல், சிவதரிசனம் செய்தல், சிவனடியாருக்குப் பணிவிடை செய்தல், ஏழை எளிய மக்களுக்கு உதவிடுதல் போன்ற செயல் சரியை நெறிகளைக் கொண்டதென்பர்.

நான்மறைகள் போற்றி வழிபட்ட மறைக்காட்டு அண்ணல் வீற்றிருக்கும் திருக்கோயிலில், சரியை நெறியில் செய்யும் பணி மிகவும் சிறியதாயினும் அது வீடுபேற்றை அளிக்கிறது. அங்கு அளவிட முடியாத அரிய திருப்பணிகளைச் செய்தோர், பெறும் சிவ புண்ணியத்தை எடுத்துரைக்கும் ஆற்றலுடையவர். திருமறைக்காடரின் அழகிய திருமுடியில் அணிவிப்பதற்கு ஏற்ற மலர்களையும், இலைகளையும் தரும் திருநந்தவனத்தை ஏற்படுத்தியவர்கள் விண்ணுலகினை ஆளும் பேறு பெற்றவர்களாகப் போற்றப்படுகிறார்கள். இதனை வேதாரணிய புராணமானது,

**“சினத்த வெவ்வினை தீர்க்குந் திருமறை**

**வனத்தி லீசர் மணிமுடிக் கேறவே**

**தனத்தை நல்கியுந் தானெயு நந்தன**

**வனத்தை வைத்தவர் வானுல காள்வரே”**

**(வேதாரணிய புராணம்,**

**தலவிசிட்டச் சருக்கம், பாடல் எண் - 113)**

என்ற பாடல் வழி குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மனிதனை இறைநிலைக்கு உயர்த்தும் மிகச்சிறந்த வழிபாடு தான, தர்ம வழிபாடாகும். கோயிலினுள் இருக்கும் இறைவனுக்குக் கொடுப்பதைவிட, பசியால் வாடும் மனிதர்களுக்கும், வறியவர்களுக்கும் செய்யும் உதவி இறைவனையே சென்று சேரும். இதனை,

**"படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"**
**(திருமந்திரம் பாடல் எண் - 1857)**

என்ற திருமந்திரப் பாடல் வழி, திருமூலர் விளக்குவதை அறியமுடிகின்றது. உலகில் வறுமையுற்றவர்களாய் இருப்போருக்கு, இத்திருத்தலத்தில் கன்னிகாதானம் அளிப்போர், தம்குடிப்பிறந்த கோடி தலைமுறையினரோடும் நன்மையளிக்கும் முக்தியில் ஒன்றிக் கலந்து வாழ்வர். மேலும் சிறப்புக்குரிய திருத்தலத்தில் கோதானம் அளிப்பவருக்கு பசுக்களை கொன்ற பாவமும், இழிந்த செயல்களால் உண்டான பெரும்பாவங்களும் நீங்கும். இதனை,

**"ஞான நீடப் பதியி னலங் கொள்கோ**
**தான மீபவர் தம்பிறப் பேழினு**
**ளான கோவதை யாயிர மன்றியு**
**மீன பாதகம் யாவு மகற்றுவார்"**
**(வேதாரணிய புராணம்,**
**தலவிசிட்டச் சருக்கம், பாடல் எண் - 110)**

என்ற புராணப் பாடல் வழி உணரமுடிகின்றது. மேலும் அத்திருத்தலத்தில் நோயுற்றவர்களுக்கு மருந்து வாங்கித் தருவது; திருக்கோயிலினுள் பணி செய்வது; அந்தணர்களுக்கும், பெருந்தவ முனிவர்களுக்கும் உதவிடுதல்; அன்னதானம் அளித்தல்; யாசகம் ஏற்பவர்களுக்கு ஒருபிடி உணவேனும் அளித்திடுதல்; அத்திருத்தலத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைத்திடுதல்; அந்தணர் வாழ்வதற்கு வீட்டையும், துறவிகள் தங்குவதற்கு மடத்தையும் கொடுத்தல்; போன்ற அறச்செயல்களைச் செய்தோர் எளிதில் சிவபதம் அடைவதற்கான நெறியாக வேதாரணிய புராணம் எடுத்தியம்புவதை அறியமுடிகிறது.

**கிரியை நெறி**

கிரியை முறையானது உள்ளன்போடு இறைவனை நினைத்து, புனித நீராடி, வேதாகம விதிப்படி சிவனுக்கு திருமஞ்சனஞ் செய்து நல்ல மந்திரப் புட்பங்களால் அர்ச்சித்துப் பூசனைகள் ஆற்றி, அன்னமளித்து, அன்புடன் தொழுது துதித்தலாகும். அதாவது மனத்தாலும், புறத்தாலும் இறைவனை முறைப்படி வழிபடுவது.

திருமுறைக்காட்டுப் பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலுக்குச் சென்று மூன்று முறையோ அல்லது ஐந்து முறையோ வலம் செய்து வணங்கி, தமக்கு இயன்ற பொருட்களைத் திருச்சன்னதியில் கொடுப்பது சிறப்புக்குரியதாகும். மேலும், பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்தும், அன்ன நிவேதனம் செய்வித்தும் கிரியா மார்க்கத்தின் வழி வணங்கினால் அருள் வள்ளலான திருமறைக்காட்டுப் பெருமானின் சிவபதத்தினை எளிதில் பெறலாம். இக்கருத்தினை,

**"வலஞ்செய்து முக்கா லைங்கால் வணங்கிமா மறைசை நாத**
**னிலங்குமா லயத்திற் சென்றாங் கியன்றன திருமுன் னீந்து**
**துலங்குநற் றூப தீபஞ் சுற்றிமஞ் சனநீ ராட்டி**
**நலந்தர வியன்ற வன்ன நிவேதன நாதற் கேற்றி"**

**(மேலது, பாடல் எண் - 130)**

என்ற பாடல் வழி பரஞ்சோதி முனிவர் எடுத்தியம்புவதைக் காணமுடிகிறன்றது. திருமறைக்காட்டுத் திருத்தலத்தில் எந்த மந்திரத்தைச் செபித்தாலும் அது உடனே சித்தியடையும் என்கிறது புராண நூல். இத்திருத்தலத்தில், தீர்த்த நீராடுதல்; மார்கழி மாதம் முழுவதும் உண்ணா நோன்பை மேற்கொள்ளுதல்; ஆயிரம் வில்வ இலைகளால் சகத்திரநாம அருச்சனை புரிந்து வணங்குதல்; திருவைந்தெழுத்தை இடைவிடாது ஓதுதல், தேவாரம், திருவாசம், திருமந்திரம் உள்ளிட்ட திருமுறை நூல்களைப் பாராயணம் செய்தல் போன்ற செயல்கள் கடைபிடிக்கப்படுகின்றன. வேதாரணிய புராணம் தீர்த்தங்களில் நீராடி வழிபடும் வழிபாட்டையே அதிகமான இடங்களில் குறிப்பிடுவதால், இத்தலத்திற்குத் தீர்த்த மேன்மை அதிகமாக இருப்பதை அறியமுடிகிறது. மேலும்,

**"அத்த லத்துநீ ராடலே யருச்சனை வேள்வி**
**மெய்த்த வங்களும் யோகமும் ஞானமும் வீடு**
**மொத்து மற்றுமத் தலம்புகுந் துலவிடப் பெற்றால்**
**முத்தி பெற்றிட வென்றொரு முயற்சிவேண் டுவதில்"**

**(மேலது, பாடல் எண் - 152)**

என்ற புராணப் பாடல் வழி, இத்திருத்தலத்தில் நீராடுவதே, அருச்சனை செய்தல், வேள்வி புரிதல், உண்மையான தவம் மேற்கொள்ளுதல், யோகம் செய்தல், சிவஞானம் பெறுதல், வீடுபேறடைதல் ஆகிய எல்லாவற்றிற்கும் நிகரானது என்பதை அரியமுடிகின்றது.

**யோக நெறி**

பஞ்சேந்திரியங்களின் வழியிலே மனதைச் செல்ல விடாது ஒருவழிப்படுத்த நிஷ்டைக் கூடி இருப்பதே யோக நெறியாகும். இந்நெறியானது சரியை, கிரியை ஆயிரண்டினும் தீவிரமானதாய் மனத்தின் பக்குவநிலையை வளர்த்துக் கொள்வதனை உள்ளடக்கி நிற்கின்றது. யோக நிலையில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம், சமாதி எனும்

அட்டாங்க நிலைகள் அமைவுறுகின்றன. திருமறைக் காட்டில் திருவைந்தழுத்தை ஒருமுறை தியானம் செய்தால், ஒரு நூறாயிரம் முறை தவம் செய்த பலனைத் தரும். இதனை,

**"முந்து வேள்விகண் முடிக்கினு முயன்றவப் பொருள்கொண்**
**டந்த நற்பய னாங்குறு மஞ்செழுத் தொருக்காற்**
**சிந்தை செய்யினூ றாயிரஞ் செபபலந் தருமற்**
**றெந்த மந்திரஞ் செபிக்கினு முடன்சித்தி யெய்தும்"**

**(மேலது, பாடல் எண் - 114)**

என்ற பாடல் வழி புராணம் எடுத்தியம்புவதை அறியமுடிகிறது.

**ஞான நெறி**

அஞ்ஞானம் அகன்று பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையை அறிதலே ஞானம் எனப்படும். திருமறைக்காட்டுத் திருத்தலத்தில் செய்யக்கூடிய செயல்கள் எல்லாம் இறைவனின் செயல்கள் என எண்ணி, யான், எனது எனும் அகப்பற்று, புறப்பற்றுகளை நீக்கி ஞான நெறியில் வாழ வேண்டும். அவ்வாறு வாழ்பவர்கள் மீண்டு பிறவா நெறி அடைந்து இறைவனின் திருப்பாதங்களை சென்றடைவார்கள். இக்கருத்தினை,

**"ஆற்றி டும்வினை யாவையு மத்தலத் தரன்பா**
**லேற்றி யானென தென்றிடா திருப்பவர் மீளத்**
**தோற்றி யன்னையர் முலையமு தருந்திடார் சொல்லின்**
**மாற்ற ருஞ்சிவா னந்தமா மதுவுண்டு மகிழ்வார்"**

**(மேலது, பாடல் எண் - 161)**

என்ற பரஞ்சோதிமுனிவரின் பாடல் வழி அறியலாகிறது.

**நிறைவுரை**

சைவ சமய மரபுகளையும், பக்தி நெறிகளையும், மனித வாழ்வின் அறம் சார்ந்த பண்புகளையும் எடுத்துரைக்கும் சிறப்புமிக்க தலபுராணமாக வேதாரணிய புராணம் விளங்குகிறது. இப்புராணம் காட்டும் வழிபாட்டு நெறிகள் வெறும் சடங்குகளாக மட்டுமன்றி, ஆன்மீக உயர்வை நோக்கிய வாழ்க்கை முறைகளாக அமைகின்றன. இறைவனை மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் வழிபடுதல், கோயில் வழிபாடு, தீர்த்தமாடல், விரதம், தானதர்மம், அடியார் பணிதல், திருநாமம் ஓதுதல் போன்ற பல்வேறு வழிபாட்டு முறைகள் மனிதனை இறையருளுக்கு அண்மைப்படுத்தும் கருவிகளாக விளக்கப்படுகின்றன. மேலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவ சமய நான்கு மார்க்கங்களும் இப்புராணத்தில் இடம்பெறுகின்றன. அவற்றுள் கிரியையுள் அடங்கும் தீர்த்த நீராடலானது, இப்புராணத்தில் பல்வேறு இடங்களில் வலியுறுத்தப்படுகிறது. பக்தி, பணிவு, ஒழுக்கம், கருணை, தன்னலமின்மை போன்ற உயரிய பண்புகளை வளர்க்கும் வகையில் வேதாரணிய புராணத்தின் வழிபாட்டு நெறிகள் அமைந்துள்ளன.

இவை தனிமனித ஆன்மீக முன்னேற்றத்திற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் வழிகாட்டுகின்றன. எனவே, வேதாரணிய புராணம் காட்டும் வழிபாட்டு நெறிகள் இறைவழிபாட்டின் மகத்துவத்தை உணர்த்துவதோடு மட்டுமல்லாமல், மனிதனை அறநெறியில் நடத்தி, இறையருளையும் ஆன்மிக நிறைவையும் அடையச் செய்யும் வாழ்வியல் வழிகாட்டியாகத் திகழ்கின்றன என்பதே இவ்வாய்வின் நிறைவான முடிவாகும்.

**துணை நூற்பட்டியல்**

[1.] பரஞ்சோதி முனிவர் அருளிய **வேதாரணிய புராணம்**

[2.] மூலமும் உரையும், உரையாசிரியர் - நற்றமிழ் நாவலர்

[3.] முனைவர் கா.நாகராசு, வெளியீடு- ஞானசம்பந்தம் பதிப்பகம்,

[4.] தருமை ஆதீனம்.

[5.] திருஞான சம்பந்தர், திருநாவுக்கர், சுந்தரர் அருளிய **மூவர் தேவாரம்**, பன்னிரு திருமுறை பதிப்பு, நிதி வெளியீடு, தஞ்சாவூர், 1968.

[6.] திருமூலர் அருளிய, **திருமந்திரம்**, கழகப் பதிப்பு, திருநெல்வேலி, 1970.

[7.] அருள் நந்தி சிவனார் அருளிய **சிவஞான சித்தியார்**, அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம் 78, செல்வி நகர், சிந்துபூந்துறை, திருநெல்வேலி 1,

[8.] மனவாசங்கடந்தார் அருளிய **உண்மை விளக்கம் -** உரை நூல்

[9.] ‘சிவத் தமிழ்ச் செல்வர்’ சித்தாந்த சரபம் ஆ.ஆனந்தராசன்,

[10.] அருள்நந்தி சிவம் புத்தக நிலையம், 49-அ, கண்ணம்மன் கோவில் தெரு, திருநெல்வேலி – 627 001.